### வடலூரில் ஆ. கிருஷ்ணசாமி தலைமையில் ஆதிதிராவிடர் நலக்குழுவின்

# விழுப்புரம் மண்டல ஆலோசனைக் கூட்டம்

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - சி.வெ.கணேசன் - கோவி.செழியன் - மா.மதிவேந்தன் மற்றும் அந்தியூர் செல்வராஜ் பங்கேற்பு!

கடலூர், ஜன.1-

கடலூர் மாவட்டம், வடலூர், மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில், 29.12.2024 ஞாயிற்றுக்கிழமை, மாலை 3.00 மணி அளவில், தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு அணியின் விழுப்புரம் மண்டல ஆலோசனை கூட்டம், கழக ஆதிதிராவிடர் நலக்குழு அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., தலைமையில் நடைப்பெற்றது.

மாநில ஆதிதிராவிடர் நலக குழு இணைச்செயலாளர்கள் மருதூர் இராமலிங்கம், செ.புஷ்பராஜ் வரவேற்புரையாற்றினர்.

மாநில இணை செயலாளர்கள் வி.பி.ராஜன், திப்பம்பட்டி ஆறுச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன், கழக துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், ஆதிதிராவிடர் நலன் மலை வாழ் பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமை தொழிலாளர்கள் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் எம்.பி., பொன்.கௌதமசிகாமணி, ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசியதாவது; கழகத்தில் 23 அணிகள் உள்ளன. இந்த அணிகளில் உள்ள நிர்வாகிகள் கடுமையாக உழைத்து, தன் சொந்த ஊரில் ஓட்டு வாங்கினால், 234 தொகுதிகளையும் வென்றெடுக்கலாம்.கழக நிர்வாகிகள் அவரவர் ஊரில் ராஜாவாக இருந்தால், தமிழ்நாட்டிற்கே தி.மு.க. ராஜாவாக இருக்கும். கழக நிர்வாகிகளுக்குள்ளேயே குறைகளை கூறிக் கொண்டிருக்காமல், முதலில் நம் முதுகில் உள்ள அழுக்கை சரிசெய்து, பிறகு எதிரி சரியாக இல்லை என்று சொல்லணும்.

சுனாமி நினைவு தினத்தன்று ஒவ்வொரு வருடமும் கழகத்தின் சார்பில் 200க்கும் மேற்பட்டோர் சென்று கடலில் பால் ஊற்றி, மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

தற்போது அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் சம்பத்கடலில் பால் தெளித்து, அஞ்சலி செலுத்தியுள்ளார். போன வருடம், அதற்கு முந்தைய வருடம் என எந்த வருடமும் அஞ்சலி செலுத்தவில்லை. அதே போல் சினிமாவில் எப்படி ஏமாற்றி வந்தார்களோ அதேபோல் நிஜத்திலும் ஏமாற்ற நேற்று பெய்த மழையில் முளைத்த காளான், பொதுச்செயலாளர் எனக்கூறி பாண்டிச்சேரியிலிருந்து ஆளைக்கூட்டி வந்து அஞ்சலி செலுத்தினர். போன வருடம் ஒருவரும் சுனாமியால் உயிரிந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த வரவில்லை.

தேர்தல் நெருங்கி வருவதால், எப்படி நடிக்கின்றார்கள் என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

1 கோடியே 18 லட்சம் பெண்களுக்கு மாதம் 1000 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. உலகத்தில் யாரும் இப்படி கொடுக்க முன்வரவில்லை. தமிழகத்தில் நமது முதல்வர் கொடுத்து வருகிறார். இதுபோன்ற பல்வேறு திட்டங்களாள் மக்கள் பயனுற்று வருகின்றனர். மக்களிடம் இதைப் பற்றி பேசுங்கள், இதனைக்கூறி வாக்கு கேட்க வேண்டும். ஆதிதிராவிடர் மக்களுக்கு அயோதிதாசர் பண்டிதர் ,திட்டத்தின் மூலம் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றது. ஆதிதிராவிடர் மக்களுக்கு சொந்தமென தாங்கள் இருந்து பணியாற்ற வேண்டும். எனது தந்தை நினைவு தினநாளில் ஒவ்வொரு வருடமும், மருதூர் இராமலிங்கம் கோவி. செழியன், நெல்லிக்குப்பம் புகழேந்தி, உள்ளிட்டோர் வந்து அமைதிப் பேரணியில் பங்கேற்று கூட்டதில் கலந்து கொள்கின்றனர். காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி பொது தொகுதியில் ஆதிதிராவிடர் சமூகத்தை சேர்ந்த கணேசமூர்த்திக்கு வாங்கிக்கொடுத்து பேரூராட்சி தலைவராக உள்ளார். இதுபோல் ஜாதி பார்க்காமல், உணர்வுடன் பணியாற்றி வருகின்றோம். என்னைப் பொறுத்த வரை உழைத்தவர்களுக்கு பதவி. இவ்வாறு பேசினார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் சபா.இராசேந்திரன் கோ.ஐயப்பன், முன்னாள் எம்.எல்.ஏக்கள் இள.புகழேந்தி, வி.டி.கலைச்செல்வன், கடலூர் கிழக்கு மாவட்ட கழக துணை செயலாளர் ஆர்.சக்திவேல், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அ.முத்துசாமி, வி.ஞானசேகரன், பொதுக் குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், பா.கோதண்டபாணி,

ஒன்றிய கழக செயலாளர்கள் வி.சிவக்குமார், ஆர்.நாராயணசாமி, தங்க.ஆனந்தன், ஏ.எஸ்மதியழகன், கே.ஆர்.ராயர், விஜி.பி.சபாநாயகம், தி.திருமூர்த்தி,கே.நடராஜன், எம்.சோழன், வி.கோவிந்தசாமி,

மாநகர கழக செயாலாளர் கே.எஸ்ராஜா, வடலூர் நகர மன்ற தலைவர் சு.சிவக்குமார், நகர கழக செயலாளர் த.தமிழ்செல்வன், பேரூர் செயலாளர்கள் எஸ்.கணேசமூர்த்தி, ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் தலைவர் மா.குமார், துணை தலைவர் செ.மோகன்தாஸ், துணை அமைப்பாளர்கள் கா.பாண்டியன், சு.கஜேந்திரன், கி.சக்திவேல், த.சிவக்குமார்,எஸ்.பி.கிருபானந்தம், கடலூர் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள்

கழக துணை செயலாளர்கள் ஆர்.எஸ்.எம்.தணிகை செல்வன், ஆனந்தி சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பாவாடை. கோவிந்தசாமி, வி.அமிர்தலிங்கம், த.சின்னசாமி,சி.தியாகராஜன், கனக.கோவிந்தசாமி, தி.வேல்முருகன், ஆசைதம்பி, ப.சுரேஷ்,நகர கழக செயலாளர் .மணிவண்ணன், பேரூர் செயலாளர்கள் சுந்தரவடிவேல், வ.ஜெயமூர்த்தி,ம.குமரவேல், கடலூர் மேற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் தலைவர் அ.கருணாநிதி, துணை தலைவர் ரா.முத்துவேல், அமைப்பாளர் சு.ராமு, துணை அமைப்பாளர்கள் ரெ.சிவமுருகன், சி.ஆறுமுகம், த.வெங்கடேசன், மு.ஜெயராமன், கு.பக்கிரி சாமி உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர். முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அம்பேத்கரை கொச்சைப் படுத்தி பேசிய, அமித்ஷாவின் பேச்சிற்கு கண்டனம் தெரிவித்து, தமிழகத்தில் உள்ள அம்பேத்கர் சிலைகளை கழுவி சுத்தம் செய்ய கூறிய முதல்வருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. தமிழர் திருநாளில், ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் பெண்களுக்கு கோலப்போட்டி நடத்தி, நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டும்.

2026 சட்டமன்ற தேர்தலில் 234 தொகுதிகளிலும் வெற்றிப்பெற்று, தமிழகத்தில் ஏழாவது முறையாக கழக ஆட்சி பொறுப்பேற்று, மீண்டும் முதல்வராக தளபதி அவர்களை அரியணை ஏற்ற உழைக்க வேண்டும். உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கடலூர் கிழக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ரா.பரந்தாமன் நன்றியுரையாற்றினார்.

# கரூரில் ரூ.15.27 கோடியில் புதிய கட்டடங்கள்!

## அமைச்சர் வி.செந்தில்பாலாஜி திறந்து வைத்தார்!

கரூர், ஜன.1-

கரூரில் ரூ.15.27கோடி மதிப்பிலான புதிய கட்டடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்தார்.

கரூர் பகுதியில் ரூ.15.27 கோடி மதிப்பிலான புதிய கட்டடங்களை கரூர் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் தலைமையில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி திறந்து வைத்தார்.

மேலும், நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை மூலம் கோதூரில் புதிய முழுநேர நியாவிலைக் கடையை திறந்துவைத்து முதல் விற்பனையை தொடங்கிவைத்தார். ஆண்டாங்கோவில் மேற்கு ஊராட்சி ஆத்தூர் பிரிவு பகுதியில் புறக் காவல் நிலையத்தை அமைச்சர் திறந்துவைத்தார்.

இத்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆ.பெரோஸ் கான் அப்துல்லா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம் (குளித்தலை), ஆர்.இளங்கோ(அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), மாநகராட்சி மேயர் வெ.கவிதா, துணை மேயர் ப.சரவணன், மாநகராட்சி ஆணையாளர் .சுதா. கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் கந்தராஜா, மாவட்ட வழங்கல் அலுவலர் மரு.சுரேஸ், உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) சரவணன். கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல் துணை காவல் கண்காணிப்பாளர் செல்வராஜ். மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், ஆர்.எஸ்.ராஜா. சக்திவேல், அன்பரசன், தாந்தோணி ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் சிவகாமி. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் சுவாதி, ஊராட்சி மன்ற தலைவர்கள் வசந்தி (வாங்கல் குப்புச்சிபாளையம்), பெரியசாமி (ஆண்டாங்கோவில் மேற்கு) அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.32.80 லட்சம் மதிப்பீட்டில் - செஞ்சி ஒன்றியம்

# வஸ்தரம்புரவடை கிராமத்தில் 2 புதிய கூடுதல் வகுப்பறை கட்டிடம் திறப்பு!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பள்ளி குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினார்!

செஞ்சி, ஜன. 1 -

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் வேலந்தாங்கல் ஊராட்சி வஸ்தளம்புர வடை கிராமத்தில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ்32.80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக புதிதாக கட்டப்பட்ட பள்ளி கட்டிடத்தை திறந்து வைத்தார்.

இதையடுத்து நடைபெற்ற நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு புதிய பள்ளி வகுப்பறையில் பள்ளி குழந்தைகளுக்கும், பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜன், செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன், ஒன்றிய கவுன்சிலர் அண்ணமாள் ஆப்பரகாம், ஊராட்சி மன்ற தலைவர் ராஜா ஒன்றிய பொறியாளர்சுப்பிரமணியன், பணி மேற்பார்வையாளர் அருணாச்சலம் தலைமை ஆசிரியர் சவுரியம்மாள், உதவி தலைமை ஆசிரியர் அமுதா, நிர்வாகிகள் வேலு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 30.12.2024 அன்று தூத்துக்குடி காமராஜர் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில் 6ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் 1000,ம் உதவித்தொகை வழங்கும் புதுமைப்பெண் விரிவாக்கம் திட்டத்தை துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து நெல்லை பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் நடைபெற்ற நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு நெல்லை மாவட்டத்தில் 83 கல்லூரிகளைச் சார்ந்த 5181 மாணவிகளுக்கு பற்று அட்டையை மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப. கார்த்திகேயன்,நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப்,மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.



மதுரை, லதா மாதவன் பாலிடெக்னிக் கல்லூரியில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி சார்பாக நடைபெற்ற தகைசால் பள்ளி 5 நாள் குளிர்கால உண்டு உறைவிட பயிற்சி முகாமில் பங்கேற்ற வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் மாணவ மாணவியர்களுடன் கலந்துரையாடினர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இணை இயக்குநர் வை. குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### குமரிமுனையில் திருவள்ளுவர் சிலையை நிறுவியவர் முத்தமிழறிஞர் கலைஞர்

# செழுமைப்படுத்தி சிலைக்கு வெள்ளி விழா எடுக்கிறார் நமது முதலமைச்சர்!

## திராவிடர் கழகத் தலைவர்கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜன. 01 -

குமரிமுனையில் திருவள்ளுவருக்கு 133 அடி உயரத்தில் சிலை நிறுவியவர் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர். அதனை மேலும் செழுமைப்படுத்தியிருக்கிறார் - சமூகநீதிக்கான சரித்திர நாயகராம் நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். திருவள்ளுவர் தந்த திருக்குறள் ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்பை நிர்மூலப்படுத்துவதே என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



முக்கடல் சூழும் குமரி முனையில் முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, 'பேரறிவுச் சிலை'யாக (Statue of Wisdom) அமைத்து (அமெரிக்காவின் 'சுதந்திரதேவி' சிலைக்குள்ள முக்கியத்துவம்போல), திராவிட ஆட்சியின் அருஞ்சாதனைகள் பட்டியலில் இடம் பெற்றது. அந்த "மானமிகு சுயமரியாதைக்காரரின்" 'திராவிட' சூத்திர, பஞ்சமர்களுக்கு சமூகநீதி வழங்கிடும் சீரிய பகுத்தறிவு அரசு.

அறிஞர் அண்ணாவின் தலைமையில் அமைந்த திராவிடர் ஆட்சியின் தொடர்ச்சியே கலைஞரின் சாதனைகள் பூத்துக் குலுங்கி காய்த்து கனிந்த நிகழ்வுகள்.

**பண்பாட்டுப் படையெடுப்பை முறியடிக்கும் திருக்குறள்!**

அந்த வள்ளுவரை - ஒப்பற்ற பேரறிவு படைத்த பெம்மானை உலகத்திற்கு நினைவூட்டும் சிறப்பே அதன்மூலம் வள்ளுவத்தை வையகம் ஏற்க வேண்டிய தேவையினை காலமெல்லாம் நினைவூட்டும் காலத்தை வென்ற சாதனை செய்து, கால் நூற்றாண்டு (வெள்ளி விழா) தாண்டும் நிலையில், அதை ஒரு வாய்ப்பாகப் பற்றிக் கொண்டு, வள்ளுவத்தைப் பரப்பி, பகுத்தறிவு, சமூகநீதி, சமத்துவ சமூகத்திற்கான பணிகளின் தொடர் சாதனைகளை விளக்கவே இப்படி ஒரு விழாவை 'திராவிட மாடல்' முதலமைச்சர் மானமிகு மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.12.2024) 'திருவள்ளுவர் சிலையை, விவேகானந்தர் பாறை யுடன்' இணைக்கும் கண்ணாடி இழை (Fiber) பாலத்தைத் திறந்து அறிவுக்கு அழகு செய்துள்ளார் அகிலம் வியப்படைகிறது!

பண்பாட்டுப் படையெடுப்பை முறியடித்து, 'திராவிடம்' என்றால் 'அனைவருக்கும் அனைத்தும்' தரும் அறிவின் தத்துவம் என்பதை வள்ளுவத்தை உண்மையாகவே புரிந்தவர்கள் வாழும் முறையாக ஆக்கி மகிழவேண்டும் என்பதே இப்பண்பாட்டுத் திருவிழாவின் நோக்கம்.

**மனோன்மணியம் சுந்தரனார் பார்வையில் மனுவும் - திருவள்ளவரும்!**

சமத்துவத்தால் கைகோர்க்கவேண்டிய மானுடத்தை - ஜாதி, மத பேதங்களால் பிளவுபடுத்திய கொடுமையை எதிர்த்துப் போர்க் குரல் எழுப்பியவர் நம் வள்ளுவப் பேராசான்!

வர்ணாசிரமத்தைத் திணித்து, மூளைக்குக் காவிச் சாயமேற்றும் கொடுமைக்கு எதிராக வள்ளுவர் கொட்டிய போர் முரசுதான் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற குறள்.

புகுத்தப்பட்ட ஜாதி, மத பேதங்களின் மண்டையில் அடித்து, மனுநீதியை எதிர்த்து முழங்கியவர்தான் வள்ளுவப் பேராசான்.

மனோன்மணியம் சுந்தரனார், "வள்ளுவர்செய் திருக்குறளை

மறுவற நன்குணர்ந் தோர்கள்

உள்ளுவரோ மநுவாதி

ஒரு குலத்துக் கொருநீதி"

என்று கேட்டார்! ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்புக்கு எதிராக அமைந்த களத்தினைக் காட்டிய செம்மல் வள்ளுவர்.

"எல்லாம் தலைவிதி"

"எதுவும் நம் கையில் இல்லை!"

என்ற மூடக் கருத்துகளை நம் மக்கள் மூளைக்குள் திணித்த பழைமையை எதிர்த்துப் போராட, மக்களுக்கு அறிவு கொளுத்திட்ட பணியே அவரது அக்காலப் பணி!

அதனால்தான் ஆரியம் வள்ளுவரை இருட்டடித்தே வைத்திருந்தது.

75 ஆண்டுகளுக்குமுன் தந்தை பெரியார் நடத்திய திருக்குறள் மாநாடு

தந்தை பெரியார் 75 ஆண்டுகளுக்குமுன்பு (15, 16.01.1949) தலைநகர் சென்னையில் இரு நாள்கள் திருவள்ளுவர் விழா எடுத்து, தமிழ் அறிஞர்களை, பெரும் புலவர்களை அழைத்துப் புத்தக அலமாரிக்குள் புதைத்து வைக்கப்பட்ட வள்ளுவரின் குறளின் ஒளியையும், ஒலியையும் எளிய மக்களிடமும் கொண்டு செல்ல வழிவகுத்தார்.

மலிவு விலையில் திருக்குறளைப் பரப்பியவர் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார்.

திராவிட இயக்கம்தான் அவரை அறிவின் ஊற்று என்பதாக மக்களிடம் கொண்டு சென்று அதன்மூலம் சரித்திரம் படைத்தது.

அந்தப் பண்பாட்டுப் போரை - அறிவுப் போரை அறப்போரை (இன்னும் ஆரியம் கைவிடாமல், வள்ளுவருக்குக் காவிச் சாயம் பூசி, கலகம் விளைவித்து திசை திருப்ப திட்டமிட்ட பணியைத் தொடர்ந்து செய்கின்றது) அதற்கு அமைதி வழியில், ஆக்கப்பூர்வ விழிப்பு ணர்வை ஏற்படுத்திடும் வெகுச் சிறப்பான முதலமைச்சரின் அற்புதமான இந்த வெள்ளி விழா, வெற்றி விழா!

விவேகானந்தருக்கு அங்கே அமைக்கப்பட்ட சிலைக்குப் பின்னால் உள்ள பல்வேறு முயற்சிகளை எப்படி முன்னெடுத்து மக்களிடம் இன்னமும் மதவெறியைப் பரப்ப, அவரை ஓர் ஆயுதமாகக் கொண்டிருக்கிறது ஆரியம் என்பதும் புரிந்து கொள்ளப் பட வேண்டிய உண்மை!

**வர்ணத்துக்காக வாதாடிய விவேகானந்தர்**

விவேகானந்தர் ஜாதிக்கு வர்ண தர்மத்திற்காக வாதாடிய விசித்திரமானவர்.

இதற்கு ஆதாரம் மனோன்மணியம் சுந்தரனார், வீட்டிற்கு அழைத்துக் கொடுத்த விருந்தின்போது, விவே கானந்தர் நடந்துகொண்ட வர்ண உணர்ச்சி வெளிப்பாடு அவரது உரைகளின் முழுத் தொகுப்பு, அவர் ஜாதி முறையை நியாயப்படுத்தியதற்கு மறுக்க முடியாத ஆதாரங்கள்.

அதற்கு சரியான மாற்று மருந்தாகத்தான் வள்ளுவருக்கு 133 அடி உயர சிலை அமைத்து, செயலை விடையாகத் தந்தார் முத்தமிழ றிஞர் கலைஞர்.

அந்த வினைத் திட்பத்தை மேலும் சிறப்புடன் வெளிச்சம் காட்டி, 'பேரறிவு ஒளியின் திருவாக நமது முதலமைச்சர் விழா மூலம் ஒரு புத்தாக்கத்தைச் செய்து, புவியோருக்குப் புரிய வைத்திருக்கிறார்.

**புதிய உலகத்தை நோக்கிய புத்தொளி!**

தலைவிதியால் தாழ்ந்த மூடநம்பிக்கையாளர்களின் முதுகெலும்பை உடைக்கும் வள்ளுவரிடம் அறிவு ஏவுகணைகளுக்குப் பஞ்சமா?

"தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன்

மெய்வருத்தக் கூலி தரும்"

என்பது போன்ற வாழ்வில் உழைப்பின்மூலம் உயர வைக்கும் தலையெழுத்து நம்பிக்கையை தகர்த்தெறியும் அறிவு ஒளி இப்படியெல்லாம் எழுதிக் கொண்டே போகலாம்.

இதனை இப்போது திராவிடத்தின் தத்துவம் தான் என உலக மக்களுக்கு எடுத்துக் கூறி, இவ்விழா கலங்கரை வெளிச்சமாகட்டும்!

'திராவிடம்' எவரையும் பிரிப்பதல்ல; எல்லோரையும் இணைப்பது" என்பதே - இணைக்கும் பாலம் தத்துவ ரீதியாகவும்!

நமது முதலமைச்சருக்கும், தமிழ்நாடு அரசின் பண்பாட்டுப் பாதுகாப்புக்கும் நமது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்!

புது உலகத்தை நோக்கிய பயணத்திற்கான புத்தொளி இது!

இவ்வாறு ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. இளமதி

**சனவரி 1 (1975)**



இளமைப் பருவத்திலேயே, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

1963ஆம் ஆண்டு சென்னை கடற்கரை சாலையில், கழகத்தின் சார்பில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு, கைது செய்யப்பட்டு ஆறு மாத கடுங்காவல் தண்டனை பெற்று சிறைவாசம் அனுபவித்தவர்.

ஒருங்கிணைந்த சென்னை மாவட்டத்தில் 88வது வட்டச் செயலாளராக 1964ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பத்தாண்டுகள் பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**